# கடற்கரை கவியரங்கு– 640
## நாள்: 04-08-2024

# தடை களைந்து வெல்வோம்!

எதைத்தேடி வந்தோமோ! எதைத்தான் அடைந்தோமோ!
வதைபடும் மனம்தன்னை வருணிக்கத்தான்இயலாது!
கதைமாந்தர் கதைபல கற்பனையாய்ச் சொல்லி வைத்தார்;
சிதையாது நெஞ்சத்தை சீர்தூக்கி வைப்பதற்கோ!

கதையாலே மனங்குழம்பிக் காலத்தை கடத்துகிறோம்!
சிதைமூட்டும் சிந்தையெல்லாம் செத்தபின்பு எங்கு செல்லும்?
வதைபடும் மனம்தனக்கு விதியென்றே கதைசொல்லி,
சிதையாது மனந்தன்னைச் சிந்திக்க விடவில்லை!

சிந்தை எழுந்திருந்தால் உண்மையது புரிந்திருக்கும்!
கந்தல்துணியாக பலநிலையில் உருளுகின்றோம்!
சொந்தமாய்ப் பலவும் மனங்கூட்டிக் கழித்தாலும்,
சிந்தையிலே பயமெழுந்து சிதைக்க முயலுமன்றோ!

பந்தம் உறவென்று பலநூறு கதைசொல்லை,
சிந்திக்க விடாத செயல்நிலைதான் என்நாளும்!
இந்நிலையில் சிலரிங்கே இரவுபகல் மனம்வெதும்ப;
அந்தியிலே சரியாகும் ஆண்டவனார் துணையிருக்க,

வந்திடுவான் இறையவனே தானழைக்க எனக்கூறி,
மந்திரமாய்ச் சில சொல்லி கடவுளைக் துணைக்கழைத்து!
தந்திரமாய்ச் சிலரிங்கே தன்தேவையைத் தான் முடிப்பர்;
எந்நிலையும் பயமில்லை என்பதாய்ப் பணம் பறிப்பர்!

எதுவாக இருந்தாலும் அதுவாக நிறைந்தாலும்,
புதிதாக ஏதுமில்லை புலம்பிடத்தான் தேவையில்லை!
உதுவாகும் உள்மனமே உண்மை நிலையறிந்து,
இதுவாகும் அறமென்றே இயன்நிலையில் வாழ்ந்திடுவோம்!

- **கவிவளவன்.** ஆகிய **கு.ப. அசோகன்.**
**04-08-2024 (மாலை:04-10)**